RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 243 | செப்டம்பர்.4 2025 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## 386 ஆசிரியர்களுக்கு மாநில நல்லாசிரியர் விருது: துணை முதல்வர் உதயநிதி வழங்குகிறார்



சென்னை, செப்.04-

சென்னையில் நடைபெறவுள்ள ஆசிரியர் தின விழாவில் 386 ஆசிரியர்களுக்கு துணை முதல்வர் உதயநிதி மாநில நல்லாசிரியர் விருது வழங்கவுள்ளார். மறைந்த குடியரசுத் தலைவர் ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளான செப். 5ம் தேதி ஆண்டுதோறும் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

இந்நாளில் சிறந்த ஆசிரியர்களைத் தேர்வு செய்து `டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது' வழங்கி தமிழக அரசு கவுரப்படுத்தி வருகிறது. இந்த விருது பெறுபவர்களுக்கு ரூ.10,000 ரொக்கம், வெள்ளிப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.

அதன்படி, நடப்பாண்டு மாநில நல்லாசிரியர் விருதுக்கு 386 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 342 பேர் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி ஆசிரியர்கள், 38 பேர் தனியார் பள்ளி ஆசிரியர்கள், ஆங்கிலோ இந்திய பள்ளிகள், சமூக பாதுகாப்புத் துறை பள்ளிகள் மற்றும் மாற்றுத் திறனாளி ஆசிரியர்களில் தலா 2 பேர் என மொத்தம் 386 பேருக்கு விருது வழங்கப்பட உள்ளது.

பள்ளிக்கல்வித் துறை சார்பில் சென்னையில் செப்.5ம் தேதி நடைபெறவுள்ள விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கு விருது வழங்கவுள்ளார். இந்த விழாவில் அமைச்சர்கள் அன்பில் மகேஸ், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அதிக மாணவர் சேர்க்கை, கற்பித்தலில் புதுமை, பள்ளிகளின் சுற்றுச் சூழலை மேம்படுத்துவதில் சிறந்த பங்களிப்பு போன்ற மாணவர்கள், அரசுப் பள்ளிகள் நலன் சார்ந்து சிறந்த பங்களிப்புகளை வழங்கிய ஆசிரியர்கள் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## திருச்சி வந்தடைந்தார் குடியரசுத் தலைவர் முர்மு: ஆளுநர், அமைச்சர்கள் வரவேற்பு



திருச்சி: செப்.4-

2 நாள் பயணமாக தமிழகம் வருகை தந்துள்ள குடியரசு தலைவர் திரவுபதி முர்மு திருச்சி வந்தடைந்தார்.

திருச்சி விமான நிலையம் வந்த குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவை, தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, அமைச்சர்கள் கே.என்.நேரு அன்பில் மகேஸ், கீதா ஜீவன் ஆகியோர் பொன்னாடைகள், பூங்கொத்துகள் கொடுத்து வரவேற்றனர்.

தொடர்ந்து, திருச்சி விமான நிலையத்தில் இருந்து ராணுவ ஹெலிகாப்டர் மூலம் குடியரசுத் தலைவர் திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத்துக்கு புறப்பட்டுச் சென்றார். மதியம் 2.30 மணியளவில் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கிறார்.

பின்னர் திருவாரூரில் இருந்து ஹெலிகாப்டரில் கிளம்பி ஸ்ரீரங்கம் பஞ்சக்கரையில் உள்ள இறங்குதளத்துக்கு மாலை 5.30 மணிக்கு வருகிறார். ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் ஸ்வாமி தரிசனம் செய்த பிறகு கார் மூலம் திருச்சி விமான நிலையம் செல்கிறார். இரவு 7 மணியளவில் திருச்சி விமான நிலையத்தில் இருந்து தனிவிமானம் மூலம் டெல்லி கிளம்பிச் செல்கிறார்.

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு சிறப்பு நிவாரண தொகுப்பு: பிரதமருக்கு ராகுல் வலியுறுத்தல்

புதுடெல்லி, செப்.04-

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பஞ்சாப், ஜம்மு காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட் மாநிலங்களுக்கு மத்திய அரசு சிறப்பு நிவாரண தொகுப்பை அறிவிக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடியை ராகுல் காந்தி வலியறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக காங்கிரஸ் மூத்த தலைவரும் மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "பஞ்சாபில் வெள்ளம் பேரழிவை ஏற்படுத்தி உள்ளது. ஜம்மு காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம், உத்தராகண்ட் மாநிலங்களின் நிலைமை மிகவும் கவலை அளிக்கிறது.

இதுபோன்ற கடினமான காலங்களில், உங்கள் கவனமும் மத்திய அரசின் தீவிர உதவியும் மிகவும் அவசியம். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் வீடுகள், உயிர்கள் மற்றும் அன்புக்குரியவர்களைக் காப்பாற்ற போராடி வருகின்றன.

இந்த மாநிலங்களுக்கு குறிப்பாக விவசாயிகளுக்கு உடனடியாக ஒரு சிறப்பு நிவாரண தொகுப்பு அறிவிக்கப்பட வேண்டும் என்றும், நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

மேலும், இதனை வலியுறுத்தும் விதமாக வீடியோ ஒன்றினையும் அவர் வெளியிட்டுள்ளார். அதில், "மக்கள் தங்கள் குடும்பங்களைக் காப்பாற்ற போராடுவதைப் பார்ப்பது வருத்தமளிக்கிறது. மக்களைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு. பாதிக்கப்பட்டுள்ள மக்களின் பாதுகாப்புக்காக ஒரு சிறப்பு நிவாரண நிதி உதவியை உடனடியாக வெளியிடுங்கள்.'' என ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

கடந்த சில வாரங்களாக வட மாநிலங்களில் தொடர் மேக வெடிப்புகள் மற்றும் வெள்ளம் ஏற்பட்டதால் ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பல பகுதிகளில் சமவெளிப் பகுதிகள் மூழ்கியுள்ளன. சாலைகள் மற்றும் தண்டவாளங்கள் மூழ்கி உள்ளன.

பஞ்சாபில் 1988க்குப் பிறகு இப்படி ஒரு பெரு வெள்ளம் ஏற்பட்டிருப்பது இதுவே முதல் முறை என செய்திகள் தெரிவிக்கின்றன. பஞ்சாபில் ஓடும் சட்லஜ், பியாஸ், ரவி ஆறுகளில் நீர்மட்டம் அபாய அளவில் உள்ளது. வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட 12 மாவட்டங்களில் 29 பேர் உயிரிழந்துள்ளனர், 2.56 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இமாச்சலப் பிரதேசத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக 2 பெண்கள் உயிரிழந்துள்ளனர். நிலச்சரிவுகள் மற்றும் திடீர் வெள்ளத்தால் ஆயிரத்து க்கும் மேற்பட்ட சாலைகள் மூடப்பட்டுள்ளன. மண்டி, காங்க்ரா, சிர்மவுர், கின்னோர் மாவட்டங்களுக்கு ஆரஞ்ச்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சிம்லாவில் பயிற்சி மையங்கள் உட்பட அனைத்து அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களையும் மூட அரசு உத்தரவிட்டுள்ளது.

## நேரடி போட்டித் தேர்வின் மூலம் தேர்வான 2,500 பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்க ஐகோர்ட் உத்தரவு



சென்னை, செப்.04-

தமிழகத்தில் நேரடி போட்டித் தேர்வின் மூலமாக தேர்வு செய்யப்பட்டுள்ள 2 ஆயிரத்து 500 பட்டதாரி ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணைகளை உடனடியாக வழங்க அரசுக்கு அனுமதியளித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக பள்ளிக்கல்வித் துறையில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்தின்போது, 50 சதவீத இடங்களை நேரடியாகவும், 48 சதவீத இடங்களை இடைநிலை ஆசிரியர்களுக்கான பதவி உயர்வு மூலமாகவும், எஞ்சிய 2 சதவீத இடங்களை தகுதி பெற்ற ஆசிரியரல்லாத அமைச்சுப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதன் மூலமும் நிரப்ப கடந்த 2007ம் ஆண்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த 2022ம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்திய போட்டித் தேர்வின் மூலமாக 2 ஆயிரத்து 500 பட்டதாரி ஆசிரியர்கள் 50 சதவீத இடஒதுக்கீட்டின்படி நேரடி நியமனத்துக்காக தேர்வு செய்யப்பட்ட நிலையில், தங்களுக்கான 2 சதவீத இடஒதுக்கீடு முறையாக வழங்கப்படவில்லை என நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியரல்லா அமைச்சுப் பணியாளர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

அந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்தின்போது அமைச்சுப்பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய 2 சதவீத இடஒதுக்கீட்டை நிரப்பிவிட்டு, அதன்பிறகு நேரடி நியமனங்களை நியமிக்கலாம் எனக்கூறி இடைக்காலத்தடை விதித்தார். தனி நீதிபதியின் இந்த தடையுத்தரவை எதிர்த்து நேரடியாக தேர்வு செய்யப்பட்ட ஜெ.பிரபாகர் உள்ளிட்ட 77 பட்டதாரி ஆசிரியர்கள் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர்.

மாதக் கணக்கில் காத்திருப்பு: இந்த மேல்முறையீட்டு வழக்கு நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், ஹேமந்த் சந்தன் கவுடர் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மேல்முறையீட்டு மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள் தாட்சாயிணி ரெட்டி, நளினி சிதம்பரம் ஆகியோர், "பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்துக்காக 50 சதவீத ஒதுக்கீட்டின்கீழ் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலமாக போட்டித்தேர்வுகளில் வெற்றி பெற்று தேர்ச்சியாகியுள்ள 2 ஆயிரத்து 500 பட்டதாரி ஆசிரியர்கள் தனி நீதிபதியின் உத்தரவால் பணி நியமனம் கிடைக்காமல் மாதக்கணக்கில் காத்து கிடக்கின் றனர்'' என வாதிட்டனர்.

அப்போது அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் மற்றும் பள்ளிக்கல்வித்துறை தரப்பில் சிறப்பு வழக்கறிஞர் எஸ்.மைத்ரேயி சந்துரு ஆகியோர் ஆஜராகி, "அமைச்சுப்பணியாளர்களுக்கான 2 சதவீத இடஒதுக்கீட்டில் கடந்த 2007 முதல் 2014 வரை 220 பேர் நியமிக்கப்பட்டு விட்டனர். 2014 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில் 2 சதவீத ஒதுக்கீட்டில் 151 பணியிடங்கள் நிரப்ப வேண்டியுள்ளது.

நீதிமன்ற வழக்கு காரணமாக அந்த பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்தது. அப்பணியிடங்களும் விரைவில் நிரப்பப்படும். தற்போது நேரடி நியமனம் மூலமாக தேர்வு செய்யப்பட்டுள்ள 2 ஆயிரத்து 500 பட்டதாரி ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணைகள் தயாராக உள்ளன'' என்றனர். அதையடுத்து நீதிபதிகள், ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்திய நேரடி போட்டித்தேர்வுகள் மூலமாக தேர்வு செய்யப்பட்டுள்ள 2 ஆயிரத்து 500 பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்துக்கும், 2 சதவீத இடஒதுக்கீட்டுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை, எனவே 50 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் நேரடியாக தேர்வு செய்யப்பட்டுள்ள 2 ஆயிரத்து 500 பட்டதாரி ஆசிரியர்களுக்கும் உரிய இடஒதுக்கீட்டு முறைகளைப் பின்பற்றி உடனடியாக பணி நியமனம் வழங்கலாம், என அனுமதியளித்து விசாரணையை 2 வார காலத்துக்கு தள்ளி வைத்துள்ளனர். மேலும், 2 ஆயிரத்து 500 பேருக்கு பணி நியமனம் வழங்கப்பட்டது தொடர்பான அறிக்கையையும் தாக்கல் செய்ய அரசுக்கு உத்தரவிட்டுள்ளனர்.



## காளையார்கோவில் வட்டார வள மையத்தில் ஒன்றிய அளவில் வினாடி வினாப் போட்டிகள்

காளையார் கோவில், செப்.4

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவிலில் ஒன்றிய அளவிலான வினாடி வினாப் போட்டிகளும் சிறார் திரைப்படப் போட்டிகளும் காளையார்கோவில் வட்டார வளமைய கூட்டரங்கில் நடைபெற்றது. வட்டார வளமைய மேற்பார்வையாளர் பொறுப்பு கஸ்தூரிபாய் தலைமையில் கீழக்கோட்டை அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி மன்ற போட்டிகளின் ஒருங்கிணைப்பாளர் ஜோதிமணி ஆகியோர் மூன்று பிரிவுகளில் தனித்தனியாக வினாடி வினா போட்டிகளை நடத்தினார்கள். 6 7 வகுப்பு மாணவர்களுக்கு நடந்த போட்டியில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மரக்காத்தூர் முதலிடத்தையும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பளுவூர் இரண்டாம் இடத்தையும் பெற்றனர். எட்டாம் வகுப்பிற்கு நடந்த போட்டியில் அரசு மேல்நிலைப்பள்ளி சிலுக்கப்பட்டி முதலிடத்தையும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மரக்காத்தூர் இரண்டாமிடத்தையும் பெற்றனர். ஒன்பதாம் வகுப்பிற்கு நடந்த போட்டியில் அரசு மேல்நிலைப்பள்ளி கொல்லங்குடி முதலிடத்தையும் அரசு மேல்நிலைப்பள்ளி மல்லல் இரண்டாமிடத்தையும் பெற்றனர். ஒன்றிய அளவில் வெற்றி பெற்றவர்கள் மாவட்ட அளவில் நடைபெறும் வினாடி வினாப் போட்டியில் கலந்து கொள்வார்கள். ஆசிரிய பயிற்றுநர்கள் மார்க்ரேட் சித்திக்பாத்திமா இளங்கதிர்செல்வி சத்தியமூர்த்தி கார்த்திக் போட்டிக்கான ஏற்பாட்டினை சிறப்பாக செய்திருந்தனர்.

## பத்திரிகையாளர்களுக்கு சமூக அக்கறை மிகவும் அவசியம்: மூத்த பத்திரிகையாளர் அறிவுரை




சென்னை, செப்.04-

பத்திரிகையாளர்களுக்கு சமூக அக்கறைதான் மிகவும் அவசிய தேவை என்று ஆசிய ஊடகவியல் கல்லூரியில் நடைபெற்ற இதழியல் பயிற்சி பயிலரங்கில் மூத்த பத்திரிகையாளர் எஸ்.சாய்நாத் அறிவுறுத்தினார்.

தமிழக அரசின் ஆதி திராவிடர் நலத்துறை, சமூக நீதி மற்றும் சமத்துவ த்துக்கான மையம், சென்னை சமூக பணி கல்லூரி, ஆசிய ஊடகவியல் கல்லூரி சார்பில் பத்திரிகை மற்றும் சமூகத் தொடர்பு குறித்து இதழியல் மாணவ மாணவிகளுக்கு 2 வாரம் காலம் பயிற்சி பயிலரங்கம் நடத்தப்பட்டது.

இப்பயிலரங்கின் நிறைவு விழா சென்னை தரமணியில் உள்ள ஆசிய ஊடகவியல் கல்லூரியில் நேற்று நடந்தது. இதில் இந்திய ஊரக மக்கள் ஆவணம் அமைப்பின் நிறுவனரான மூத்த பத்திரிகையாளர் பி.சாய்நாத் நிறைவுரை ஆற்றி பேசியதாவது:

ஒருவர் சிறந்த பத்திரிகையாளராகத் திகழ வேண்டுமானால் அவருக்கு தொழில்நுட்பத்திறன், பேரார்வம், நம்பகத்தன்மை, பொதுமக்களை சமாதானப் படுத்தும் திறன் போன்ற பண்புகள் தேவை.

ஆனால். எல்லாவற்றுக் கும்மேலாக பத்திரிகையாளர்களுக்கு சமூக அக்கறைதான் மிகவும் அவசிய தேவை ஆகும். மொழியறிவு என்பது இரண்டாம்பட்சம்தான். மொழி என்பது தகவல் தொடர்பு சாதனம் மட்டுமே. மாறாக பத்திரிகையாளரின் எழுத்துத்திறனை காண்பிக்க க்கூடிய தளம் அல்ல. சட்டத்தில் தீண்டாமையை ஒழித்துவிட்டோம். ஆனால் அன்றாட நடைமுறை வாழ்க்கையில் இன்னும் தீண்டாமை இருந்து வருகிறது என்பதுதான் உண்மை.

மதிய உணவு திட்டம் தமிழகத்தை தொடர்ந்து இந்தியாவின் இதர மாநிலங்களில் செயல்படுத்தப் பட்டபோது அவற்றை நேரடியாக பார்க்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அப்போது ஒடிசா மாநிலத்தில் ஒரு பள்ளியில் சத்து ணவு வழங்கும் போது குழந் தைகள் சாதிவாரியாக பிரித்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டு மனவேதனை அடைந்தேன்.

இந்தியாவின் குடியரசு தலைவர்களாக, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதிகளாக, மாநிலங்களில் ஆளுநர்களாக, முதல்வர்களாக தலித் வகுப்பினர் பணியாற்றி உள்ளனர்; பணியாற்றியும் வருகின்றனர். ஆனால், தேசிய அளவிலான ஊடக நிறுவனங்களில் தலித் சமூகத்தினர் முக்கிய பதவிகளில் எத்தனை பேர் உள்ளனர்? சமுதாயத்தில் சமூக சமத்துவமின்மை இன்னும் நிலவுகிறது.

இத்தகைய சூழலில் இளம் பத்திரிகையாளர்கள் புதிய சிந்தனையோடு சமுதாயத்தை பார்க்க வேண்டும். அவர்களின் இதயத்தில் சமூக அக்கறையும் கரிசனமும் தோன்றால் அது அவர்களின் சிந்தனையிலும் எதிரொலிக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக, சென்னை சமூக பணிகள் கல்லூரி முதல்வர் எஸ்.ராஜா சாமுவேல் வரவேற்றார். ஆசிய ஊடகவியல் கல்லூரியின் இணை டீன் மோகன் ராமமூர்த்தி பயிலரங்க அறிக்கை வாசித்தார். டீன் நளினி ராஜன் அறிமுகவுரை ஆற்றினார். நிறைவாக, சமூக நீதி மற்றும் சமத்துவத்துக்கான மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.சுசீந்திரா நன்றி கூறினார்.



# வேலூர், கிரீன் சர்கில், டாக்டர். அகர்வால் கண் மருத்துவமனை சார்பில், 40வது தேசிய கண்தான விழிப்புணர்வு பேரணி

வேலூர், செப்.04-

வேலூர் மாவட்டம், வேலூர் கிரீன் சர்க்ளில் உள்ள டாக்டர். அகர்வால் கண் மருத்துவமனையின் சார்பில் 40வது தேசிய கண் தான விழிப்புணர்வு பேரணி விழா மருத்துவ மண்டல தலைவர் ஐசக் ஆபிரகாம் ராய் தலைமையிலும், பூரிசு கல்லூரி பேராசிரியர் திருமாறன் முன்னிலையிலும் நடைபெற்றது இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் மேயர் சுஜாதா ஆனந்தகுமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, கொடியசைத்து துவக்கி வைத்தனர். இதில் இந்தியன் மருத்துவ சங்க தலைவர் மருத்துவர் வெங்கட்ராமன், டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை மருத்துவர்கள், செவிலியர்கள், அலுவலர்கள், பணியாளர்கள், ரோட்டரி மற்றும் லயன்ஸ் கிளப் சார்ந்தவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர் பேரணியில் ஐடா ஹெல்த் அகாடமி மற்றும் அன்னம்மாள் இன்ஸ்டியுட் ஆப் மேனேஜ்மெண்ட் மாணவர்கள் 150 க்கும் மேற்பட்டோர் இந்த பேரணியில் கலந்து கொண்டனர்.

# மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

சிவகங்கை, செப்.04-

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) சார்பாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது.



தாட்கோவின் முன்னெடுப்பாக சென்னையில் உள்ள முன்னணி தொழில் நுட்ப பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு, ட்ரோன் தயாரிப்பு, கூட்டமைப்பு , சோதனை மற்றும் பறக்கும் தொழில் நுட்ப பயிற்சி (Drone Manufacturing Assembly Test& Flying), எம்பெடெட் சென்சார் சோதனை பயிற்சி (Embedded Sensor Testing Program), பிரிண்டெட் சர்க்யூட் போர்டு வடிவமைப்பு பயிற்சி திட்டம் (PCB Designing Program), பொறியியல் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு பயிற்சி திட்டம் (Core Tech Placement program) போன்ற பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.

மேலும், இப்பயிற்சியினை பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தைச் சார்ந்தவர்களாகவும், ட்ரோன் தயாரிப்பு, கூட்டமைப்பு , சோதனை மற்றும் பறக்கும் தொழில் நுட்ப பயிற்சி (Drone Manufacturing Assembly Test& Flying), ஆகிய பயிற்சிக்கு ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு முடித்தவராகவும், எம்பெடெட் சென்சார் சோதனை பயிற்சி (Embedded Sensor Testing Program), பிரிண்டெட் சர்க்யூட் போர்டு வடிவமைப்பு பயிற்சி திட்டம் (PCB Designing Program), பொறியியல் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு பயிற்சி திட்டம் (Core Tech Placement program) போன்ற பயிற்சிகளுக்கு ஏதேனும் ஒரு இளநிலை பொறியியல் பட்டப்படிப்பு அல்லது ஏதேனும் ஒரு பொறியியல் பட்டயப்படிப்பில் (Diploma) தேர்ச்சி பெற்றவர்களாகவும், 18 முதல் 35 வயது வரை உள்ளவர்களாகவும், குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் 3.00 லட்சத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். தங்கும் விடுதி மற்றும் உணவு உட்பட ஆகியவைகளுக்கான செலவினத்தொகை தாட்கோ சார்பில் வழங்கப்படும்.

எனவே, ட்ரோன் தயாரிப்பு, கூட்டமைப்பு , சோதனை மற்றும் பறக்கும் தொழில் நுட்பபயிற்சி (Drone Manufacturing Assembly Test& Flying), எம்பெடெட் சென்சார் சோதனை பயிற்சி (Embedded Sensor Testing Program), பிரிண்டெட் சர்க்யூட் போர்டு வடிவமைப்பு பயிற்சி திட்டம் (PCB Designing Program), பொறியியல் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்பு பயிற்சி திட்டம் (Core Tech Placement program) ஆகிய பயிற்சி பெற விரும்பும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள், www.tahdco.com என்ற தாட்கோ இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



# வரதராஜபுரம் ஊராட்சியில் மாற்று கட்சியிலிருந்து விலகி திமுகவின் இணைத்துக் கொண்டனர்

வரதராஜபுரம், செப்.04-

காஞ்சிபுரம் மாவட்டம் குன்றத்தூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட வரதராஜபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் செல்வமணி தலைமையில் காஞ்சிபுரம் மாவட்ட குழு தலைவர் படப்பை மனோகரன் அவர்களின் ஆலோசனைப்படி பாஜகவின் முன்னாள் குன்றத்தூர் ஒன்றிய இளைஞரணி தலைவர் பா.கார்த்திக் பாஜகவில் இருந்து விலகி தன்னை திமுகவில் இணைத்துக் கொண்டனர் பின்னர் மாற்று கட்சியிலிருந்து வருகை தந்த நிர்வாகி பொன்னாடை போற்றி வாழ்த்துக்கள் தெரிவித்தனர் இதில் திமுக நிர்வாகிகள் உடன் இருந்தனர்



■ மதுரை மேலூர் ஊராட்சி ஒன்றியம் வெள்ளலூர், கோட்டநத்தம்பட்டி ஊராட்சிக்களுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் மேலூர் தாசில்தார் செந்தாமரை,வட்டார வளர்ச்சி அலுவலர்கள்,சுந்தர சாமி,சரஸ்வதி,துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கார்த்தி ஊராட்சி செயலாளர் சங்கையா ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர். முகாமில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# 11.09.2025 அன்று பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரன் நினைவு தினம் அனுசரித்தல் தொடர்பாக ஆலோசனைக் கூட்டம்

இராமநாதபுரம், செப்.04-

11.09.2025 அன்று பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரன் நினைவு தினம் அனுசரித்தல் தொடர்பாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் 18.08.2025 அன்று மாலை 04.00 மணியளவில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் புதிய கட்டிட கூட்டரங்கில் அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் சமுதாய அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட சட்டம் ஒழுங்கு முன்னேற்பாடுகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள்

அஞ்சலி செலுத்த வருபவர்கள் கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகள்

அஞ்சலி செலுத்த இராமநாதபுரம் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து வருபவர்கள் சொந்த வாகனங்களில் மட்டுமே வர அனுமதிக்கப்படுகிறது. வாடகை வாகனங்கள் (T.Board) மற்றும் திறந்த வெளி வாகனங்களில் (Open type) வர அனுமதி இல்லை. இரு சக்கர வாகனங்கள், டிராக்டர், டாடா ஏஸி (TATA ACE), சைக்கிள் போன்ற வாகனங்களில் வர அனுமதி இல்லை.

சொந்த வாகனங்கள் மூலம் (கார் மட்டும்) வருகை தருபவர்கள், வாகன எண், வாகன பதிவு சான்று, வாகன ஒட்டுநர் உரிமம், வாகனத்தில் பயணம் செய்வோர் விபரங்களை 06.09.2025 தேதிக்கு முன்பாக சம்பந்தப்பட்ட உட்கோட்ட அலுவலகங்களில் (DSP Office) அளித்து வாகன அனுமதி சீட்டு (Vehcile Pass) பெற்றுக் கொள்ள வேண்டும். இதனை வாகனத்தில் முன்புற கண்ணாடியில் ஒட்ட வேண்டும். வாகன அனுமதிச் சீட்டு இல்லாத வாகனங்கள் பரமக்குடி செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

பிற மாவட்டங்களிலிருந்து சொந்த வாகனங்களில் வரும் நபர்கள் அந்தந்த மாவட்டங்களில் முறையான அனுமதி பெற்று வர வேண்டும்.

சொந்த வாகனங்களில் செல்பவர்கள் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் மட்டுமே நினைவிடத்திற்கு வந்து செல்ல வேண்டும்.

வாகனத்தின் மேற்கூரையில் பயணம் செய்யக் கூடாது.

வாகனத்தில் ஆயுதங்கள் ஏதும் எடுத்துச் செல்லக் கூடாது. வரும் வழித்தடங்களில் வெடி போடுவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

வாகனத்தில் ஒலி பெருக்கிகள் பொருத்திச் செல்லக் கூடாது.

வாகனங்களில் சாதி மத உணர்வுகளைத் தூண்டும் வாசகங்கள் அடங்கிய பேனர்களைக் கட்டி வரவோ, கோஷங்களை எழுப்பவோ கூடாது.

தெளிச்சாத்தநல்லூர் சந்திப்பு முதல் சந்தைப் பேட்டை சந்திப்பு வரையிலான சாலையில் எந்த ஒரு வாகனத்தையும் நிறுத்தி வைக்க அனுமதி கிடையாது. மேலும் ஓட்டப்பாலம் ரவுண்டானா, நவீன்பேக்கரி, காவல்நிலையம், பொன்னையாபுரம் மேம்பாலம் வரையிலான சாலைகளிலும் எந்த ஒரு வாகனத்தையும் நிறுத்தி வைக்க அனுமதி கிடையாது.

வாகனங்களில் வரும் பொழுது வரும் வழியில் போக்குவரத்திற்கு இடையூறு செய்யும் வகையில் வாகனங்களை நினைத்த இடங்களில் நிறுத்தக் கூடாது.

அஞ்சலி செலுத்துவதற்காக கிராமங்களிலிருந்து பேருந்துகளில் வருபவர்கள் தங்கள் கிராமங்களிலிருந்து காலை 10.00 மணிக்குள் புறப்பட வேண்டும்.

கூடுதல் பேருந்துகளில் பிளக்ஸ் போர்டு, பேனர், கட்சி கொடிகள் டிரம்ஸ்செட் மற்றும் ஒலிபெருக்கி ஆகியவற்றை பயன்படுத்தக் கூடாது. மேலும் ஜோதி தொடர்பான உபகரணங்களை பேருந்துகளில் எடுத்து வரக்கூடாது.

கூடுதல் பேருந்துகளில் படிக்கட்டு மற்றும் மேற்கூரையில் பயணம் செய்யக்கூடாது.

கூடுதல் பேருந்துகளில் பயணம் செய்ய நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை பயணம் ஆரம்பிக்கும் முன்பே செலுத்த வேண்டும் அனைவரும் முறையாக பயணச் சீட்டு பெற்று வர வேண்டும்.

கூடுதல் பேருந்துகள் 11.09.2025 ஆம் தேதி ஒரு நாள் மட்டுமே இயக்கப்படும்.

அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகளின் தலைவர்கள் வரும்பொழுது உடன் 3 சொந்த வாகனங்கள் மட்டும் அனுமதிக்கப்படும், மேலும் தலைவர்களுக்கு ஒதுக்கப்பட்ட குறித்த நேரத்தில் அஞ்சலி செலுத்தி விட்டு செல்ல வேண்டும்.

நடைபயணமாக அஞ்சலி செலுத்த வரக்கூடாது. பரமக்குடி நகருக்குள் மட்டும் அனுமதிக்கப்பட்ட வழிதடங்களில் 1 கி.மீ தொலைவிற்குள் மட்டுமே நடைபயணமாக செல்லலாம்.

ஜோதி, முளைப்பாரி மற்றும் பால்குடம் ஆகியவற்றை நினைவிடத்திலிருந்து சுமார் 1 கி.மீ. தொலைவிற்குள் மாவட்ட நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தில் மட்டுமே எடுத்து வர அனுமதிக்கப்படும்

சொந்த ஊரில் செப்டம்பர் 11ஆம் தேதிக்கு முந்தைய தினமோ, பிந்தைய தினமோ எவ்வித நிகழ்ச்சிகள் கொண்டாடவும், ஒலிபெருக்கி அமைப்பதற்கும் அனுமதி கிடையாது. செப்டம்பர் 11ஆம் தேதி மட்டும் அவரவர்களது சொந்த ஊரில் ஒலிபெருக்கி இன்றி புகைப்படம் வைத்து, மாலை அணிவித்து மரியாதை செலுத்தலாம். பரமக்குடி நினைவிடத்தில் செப்டம்பர் 11ஆம் தேதி மட்டும் அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்படும்.

நினைவிடத்தில் தேவேந்திரர் பண்பாட்டுக் கழகம் சார்பாக மட்டுமே கூட்டத்தை முறைப்படுத்த ஒரு ஒலிபெருக்கி மட்டும் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படும். நினைவிடத்திற்குள் தலைவர்கள் ஒலிபெருக்கியில் பேசுவதற்கு அனுமதி இல்லை.

அலங்கார ஊர்தி அணிவகுப்பு, மாட்டு வண்டியில் வருதல், சாதித் தலைவர்கள் வேடமணிந்து வருதல் ஆகியவற்றுக்கு அனுமதி இல்லை.

அஞ்சலி செலுத்த வருபவர்களில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் (Registered Politocal Parties) தலைவர்களுக்கு மட்டும் நேரம் ஒதுக்கீடு செய்யப்படும். இதற்கு ஏதுவாக சம்மந்தப்பட்ட அரசியல் கட்சிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 06.09.2025 ஆம் தேதி வரை அளிக்கப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.

பரமக்குடி நினைவிடத்தில் 11.09.2025 ஆம் தேதி அன்று மாலை 04.00 மணிக்குள் அனைத்து நிகழ்ச்சிகளையும் முடித்துக் கொள்ள வேண்டும்.





# சிவகங்கை நகர்மன்றத் தலைவர் துரை ஆனந்த் பிறந்தநாள் விழா

சிவகங்கை, செப்.04-

சிவகங்கை நகர திமுக செயலாளரும் நர்மன்றத் தலைவருமான சி. எம். துரை ஆனந்த் தனது 55 வது பிறந்தநாளை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு சைவம் மற்றும் அசைவ உணவுகள் வழங்கி தனது பிறந்தநாளைக் கொண்டாடினார்... முன்னதாக நகராட்சி அலுவலக ஊழியர்கள் முன்னிலையில் கேக் வெட்டியும் அசைவ உணவு வழங்கியும் கொண்டாடினார்..இந்த நிகழ்ச்சியில் துணைத்தலைவர் கார்கண்ணன்,கேப்டன் சரவணன், அயுப்கான், வீணஸ் இராமநாதன், வீரகாளை , உள்ளிட்ட பல்வேறு கட்சியினரும் வாழ்த்து தெரிவித்தனர்



# கன்னியாகுமரி மாவட்டம் சிவந்தி ஆதித்தனார் கல்லூரியில் ஓணம் பண்டிகை கொண்டாட்டம்

கன்னியாகுமரி, செப்.04-

ஓணம் பண்டிகை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்டம் பிள்ளையார்புரம் சிவந்தி ஆதித்தனார் கல்லூரியில் வைத்து ஓணம் பண்டிகை கொண்டாடப்பட்டது. இதில் கல்லூரி முதல்வர் ரங்கநாதன் தலைமை தாங்கினார். மாணவிகளுக்கான கோலப் போட்டிகள் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு தென்குமரி கல்விக்கழக தலைவர் ஜெயசீலன், தென்குமரி கல்விக் கழகச் செயலாளர் டாக்டர். பி.டி.செல்வகுமார் , சிவந்தி ஆதித்தனார் கல்லூரி தலைவர் தர்மலிங்க உடையார் , இணைந்து பரிசுகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



# பழனி அருகே திருக்குட நன்னீராட்டு பெருவிழா

திண்டுக்கல், செப்.04-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ள பச்சளநாயக்கன்பட்டியில், ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் தபோவனம், ஸ்ரீமத் அருணகிரிநாதர் சுவாமிகள் திருக்கோயிலில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா வருகின்ற வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 10 மணி வரை நடைபெறுகிறது.

அதனை முன்னிட்டு கோயிலில் சிறப்பு ஏற்பாடுகள் மற்றும் பூஜைகள் நடைபெற்றது. முன்னதாக கோயில் நிர்வாகிகள் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிக்கையில் சென்னை திருவான்மியூரில் உள்ள பாம்பன் சுவாமிகள் திருக்கோவிலுக்கு சென்ற பொழுது அங்கு ஒரு சாமியார் நீங்கள் எப்பொழுது பாம்பன் சுவாமிகள் கோயில் வேறு பகுதியில் அமைப்பீர்கள் என கேட்டார். இதேபோல் பலரும் என்னிடம் சுவாமிகள் கூறுவது போல் கூறவே, இந்த கோயில் உருவாகியுள்ளது. இவ்வாறு பலரின் ஆசிர்வாதத்தால் உருவான கோயிலில் வரும் வியாழக்கிழமை கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. எனவும் தெரிவித்தார்.



# மருது பாண்டியர்கள் பிறந்த நரிக்குடியில் திருவுருவ சிலை அமைக்க எடப்பாடி பழனிசாமியிடம் கோரிக்கை வைத்த வாரிசுதாரர்கள்

மதுரை, செப்.04-

முன்னாள் முதல்வர், அதிமுக பொதுச் செயலாளர், எடப்பாடி பழனிசாமி நான்காம் கட்ட எழுச்சிப் பயணமாக ஒன்றாம் தேதி முதல் நான்காம் தேதி வரை மதுரை மாவட்டத்தில் 10 தொகுதிகளில் எழுச்சிப் பயணத்தை மேற்கொள்கிறார். மதுரையில் உள்ள தனியார் ஹோட்டலில் அதிமுக பொதுச் செயலாளர் புரட்சித்தமிழர் எடப்பாடி பழனிசாமியை சுதந்திர போராட்ட மாவீரர்கள் மாமன்னர் மருது பாண்டியர்களின் வாரிசுதாரர்கள் நேரில் சந்தித்து கோரிக்கை மனு வினை வழங்கினர். மருதுபாண்டியர் திருவுருவப்படத்தை நினைவுப்பரிசாக எடப்பாடி பழனிசாமிக்கு வழங்கினர். கோரிக்கை மனுவில் , மாமன்னர்கள் மருதுபாண்டியர் பிறந்த நரிக்குடி முக்குளத்தில் மருதிருவர்களுக்கு வெண்கல சிலையும் மணிமண்டபம் கட்டித்தர வேண்டும். மருது பாண்டியர் வாரிசுதாரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை நிறுத்தாமல் தொடர்ந்து வழங்க வேண்டும். மாமன்னர் மருதுபாண்டியர்களால் கட்டப்பட்ட நரிக்குடி அன்னதான சத்திரத்தை புனரமைத்து மருதிருவர் குறித்த ஆவணங்களை அருங்காட்சியகமாக மாற்ற வேண்டும் என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது. இச்சந்திப்பின்போது இளங்கோவன், பாண்டியன், சூடியூர் சாத்தையா (எ) கண்ணன், மங்கைமணிவிழி நாச்சியார், தேன்மொழி மற்றும் வாரிசுதாரர்கள் பலர் உடனிருந்தனர். சந்திப்பிற்கான ஏற்பாடுகளை அதிமுக வழக்கறிஞர் கே.தினேஷ்பாபு செய்திருந்தார்.

# வளரிளம் பருவத்தில் நிகழும் கர்ப்பத்தை தடுக்கும் பொருட்டு தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டத்தினை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்

தேனி, செப்.04-

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் மேகமலைமணலார் பகுதியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிர மணியன் அவர்கள் தமிழ்நாட்டில் வளரிளம் பருவத்தில் அதிகமாக கர்பங்கள் நிகழும் 24 வட்டாரங்களில் தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.என்.இராமகிருஷ்ணன் அவர்கள் (கம்பம்), திரு.ஆ.மகாராஜன் அவர்கள் (ஆண்டிபட்டி), திரு.கே.எஸ்.சரவணக்குமார் அவர்கள் (பெரியகுளம்) ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்தார்.


இந்நிகழ்வில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் தமிழ்நாட்டில் வளரிளம் பருவத்தில் கர்ப்பங்கள் நிகழும் 24 வட்டாரங்கள் அடையாளம் காணப்பட்டு, அந்த வட்டாரங்களில் உள்ள மக்களுக்கு தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள்.

அதனடிப்படையில் இன்றைய தினம் இத்திட்டம் தமிழ்நாட்டில் தேனி உட்பட, 10 மாவட்டங்களில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் மொத்தம் உள்ள 8 வட்டங்களில் 6 வட்டங்களில் வளரிளம் பருவத்தில் கர்ப்பங்கள் அதிகமாக நிகழ்வதால் இத்திட்டம் மேகமலையில் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. 24 வட்டாரங்களில் ஒரு துணை சுகாதார மையத்திற்கு 5 கிராமங்கள் வீதம் 2320 கிராமங்களில் தெரு நாடகங்கள் நடைபெற உள்ளது.

பெண்கள் இளம்வயதில் திருமணம் செய்யும்போது, பெண்களின் கர்ப்பப்பை, கர்ப்பத்தை தாங்கும் அளவிற்கு வளர்ச்சி அடைந்திருக்காது. இதனால் குழந்தை மற்றும் தாய்க் கும் பாதிப்பு ஏற்படும். இதுதொடர்பாக, சமூகநலத்துறையின் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும் மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பிலும் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, கலைக்குழுவினர் மூலம் தெருநாடகங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

கலைக்குழுவினர் மூலம் வளரிளம் பருவத்தினர் மற்றும் சமூகத்தினரிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இளம்வயது கர்ப்பத்தினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும்



தடுக்கும் முறைகள் குறித்து தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி சமூக மாற்றுத்தை ஏற்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் மகப்பேறு இறப்பு விகிதம் ஒரு இலட்சம் மகப்பேறு தாய்மார்களில் கடந்த 2021-2022 ஆம் ஆண்டில் 90 ஆகவும், 2022-2023 ஆம் ஆண்டில் 52 ஆகவும், 2023-2024 ஆம் ஆண்டில் 45.5 ஆகவும் 2024-2025 ஆம் ஆண்டில் 39.4 ஆகவும் குறைந்துள்ளது.

மகப்பேறு குழந்தை இறப்பு விகிதம் 1000 குழந்தைகளுக்கு 2021-2022 ஆம் ஆண்டில் 10.4 ஆகவும், 2022-2023 ஆம் ஆண்டில் 10.2 ஆகவும், 2023-2024 ஆம் ஆண்டில் 8.2 ஆகவும், 20242025 ஆம் ஆண்டில் 7.7 ஆகவும் குறைந்துள்ளது.

இதில் தேனி மாவட்டத்தில் மகப்பேறு இறப்பு விகிதமானது 43.3 ஆகவும், குழந்தை இறப்பு விகிதம் 9.4 ஆகவும் உள்ளது. மகப்பேறு இறப்பு விகிதம் மற்றும் குழந்தை இறப்பு விகிதத்தை பூஜ்ஜிய விகிதமாக குறைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தேனி மாவட்டத்தில் அதிக வளரிளம் கர்ப்பங்கள் நிகழும் 6 வட்டங்களில் உள்ள 105 துணை சுகாதார நிலையங்களில், ஒரு துணை சுகாதார நிலையத்திற்கு 5 வீதம் 525 தெரு நாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவ துறையில் மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மை காக்கும் 48, இதயம் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களை தேடி மருத்துவம் போன்ற பல்வேறு வகையான சிறப்பு மருத்துவ திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும், குழந்தைகள் இடைநிற்றலை தவிர்க்க காலை உணவுத்திட்டம், இல்லம் தேடிக்கல்வி உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் கல்வி மற்றும் மருத்துவத்துறையில் வளர்ச்சி அதிகமாக உள்ளது.

மருத்துவ நல்வாழ்வுத் துறையின் சுகாதார திட்டங்கள் சேவைகள் குறித்து தெரிந்து கொள்ள 104 என்ற எண்ணையும், குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பாக இலவச 1098 என்ற எண்ணையும், மனநலம் மற்றும் தற்கொலை தடுப்பு தொடர்பான ஆலோசனைகள் பெற 14416 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டில் வளரிளம் பருவம் கர்ப்பத்தை தடுப்பதற்காக தெருநாடகங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டம் இன்றைய தினம் தேனி மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக மலைகிராமத்தை தேர்வு செய்தது மிகவும் சிறப்பானது. தற்பொழுது மாணவர்கள் படிப்பதற்கு தேவையான அனைத்து வசதிகளும் அரசின் சார்பில் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு விழிப்புணர்வு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருமணம் செய்துவிட்டு படிக்கலாம் என்று சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு கட்டாய திருமணம் செய்து வைக்கிறார்கள். ஆனால், திருமணம் செய்தபிறகு நம் விருப்பப்படி தொடர்ச்சியாக படிக்க இயலாது.

சில சமூகபழக்கங்களால் கல்வி பயில்வது தடைபட கூடாது. கல்வி மிக மிக முக்கியமானது. உயர்பதவியில் உள்ள அனைத்து அலுவலர்களும் படித்து முன்னேறியவர்களே. பெற்றோர்கள் தவறவிட்ட கல்வியறிவை தங்கள் பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். தற்பொழுது மாணவர்கள் தங்கள் இலக்கை உறுதியாக நிர்ணயித்து அதனை அடைவதற்கு தேவையான முயற்சிகளை ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் பின்பற்றி வருகிறார்கள்.. மேலும் அரசின் சார்பிலும், நான் முதல்வன், கல்லூரிக்கனவு உள்ளிட்ட உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது மற்றும் கல்வி உதவித்தொகைகளும் வழங்கப்பட்டு வருகிறது. கல்வி பயில்வதற்கு அரசின் சார்பில் வழங்கப்படும் வாய்ப்புகளை பெற்றோர்கள் பயன்படுத்தி தங்கள் பிள்ளைகளை படிக்க வைத்து, அவர்களை சமுதாயத்தில் மதிப்பு மிக்கவர்களாக உருவாக்க வேண்டும். மேலும், குழந்தை திருமணம் தொடர்பாக தகவல் தெரிந்தால் உடனடியாக புகார் தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு உதவித்தொகை திட்டத்தின் கீழ் முதல் தவணையாக தலா ரூ.6000/ வீதம் 2 பயனாளிகளுக்கும், , கர்ப்பிணி தாய்மார்களுக்கான மருத்துவ பெட்டகம் 4 பயனாளிகளுக்கும், மருந்து பெட்டகம் 2 பயனாளிகளுக்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சினேஹாப்ரியா இ.கா.ப., துணை இயக்குநர் (ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம்) திரு.விவேக் பரஸ்நாத் யாதவ், இ.வ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ஐ.மகாலட்சுமி, உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் திரு.செய்யது முகமது, இணை இயக்குநர்கள் திரு.செந்தில்குமார் (ஆரம்ப சுகாதார நிலையங்கள்), திரு.சுரேஷ்குமார் (பயிற்சி), மாவட்ட சுகாதார அலுவலர் திரு.ஜவஹர்லால், உதவி இயக்குநர் (பேரூராட்சி) திரு.கிறிஸ்டோபர் தாஸ், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி சியாமளாதேவி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி ரேவதி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.மதியழகன், மாவட்ட நியமன அலுவலர் மரு.சசிதீபா, துணை காவல் கண்காணிப்பாளர் திரு.சுனில், வட்டார மருத்துவ அலுவலர் திரு.முருகன், செயல் அலுவலர் (ஹைவேவிஸ்) திரு.. சீனிவாசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டர்.



■ மதுரை மாவட்டம் சத்திரப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி அவர்கள், மாண்புமிகு பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் ஆகியோர் வாசிப்பு இயக்கத்தை தொடங்கி வைத்து பள்ளிக்கு தேவையான பொருட்களை வழங்கி தொடங்கி வைத்து மாணவ மாணவிகளிடம் புத்தக வாசிப்பு திறன்களை கேட்டறிந்தார்கள். சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆ.வெங்கடேசன் அவர்கள், மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.பூமிநாதன் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

# விநாயகர் சிலைகளை கரைக்க கட்டணம் வசூலிக்காதது ஏன்

## மாநகராட்சிக்கு பசுமைத் தீர்ப்பாயம் கேள்வி



சென்னை, செப்.04-

விநாயகர் சிலைகளை கரைக்க கட்டணம் வசூலிக்காதது ஏன் என சென்னை மாநகராட்சிக்கு தென் மண்டல தேசிய பசுமைத் தீர்ப்பாயம் கேள்வி எழுப்பி உள்ளது. பட்டினப்பாக்கம் கடற்கரை பகுதிகளில் கரைக்கப்பட்ட சிலைகளின் கழிவுகளை அப்புறப்படுத்தாதது குறித்து தீர்ப்பாயத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கில், பட்டினப்பாக்கம் கடற்கரையில் குவிந்த கழிவுகளை அப்புறப்படுத்த மாநகராட்சி தவறிவிட்டது என்றும் கட்டணம் வசூலித்தால் அந்த நிதி மூலம் தூய்மை பணிகளை மேற்கொள்ளலாம் என்றும் தீர்ப்பாயம் குறிப்பிட்டுள்ளது.




■ மதுரை கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் தும்பைபட்டி, எட்டி மங்கலம்,சென்னகரம்பட்டி, ஊராட்சிகளுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் மேலூர் தாசில்தார் செந்தாமரை,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் செல்ல பாண்டியன்,சங்கர் கைலாசம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிவகுமார், அய்யனார், ஊராட்சி செயலாளர்கள்கணேசன், பிரபு, சுவேகம் ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களிடம் மனுக்களை பெற்றனர்.முகாமில் திமுக ஒன்றிய செயலாளர் ராஜராஜன் மற்றும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# இலவச கண் மருத்துவ முகாம்: 40 பயனாளிகளுக்கு இலவச கண்கண்ணாடி வழங்கும் நிகழ்ச்சி

கூடுவாஞ்சேரி, செப்.04-

செங்கல்பட்டு மாவட்டம் ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்டம் மொபைல் அசோசியேஷன் நந்திவரம் கூடுவாஞ்சேரி அபிமன் லயன் சங்கம் சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனை மூலம் (6/8/25 அன்று நடந்த இலவச கண் மருத்துவ முகாமில் பரிந்துரை செய்யப்பட்ட 40 பயனாளிகளுக்கு இலவச கண்கண்ணாடி வழங்கும் நிகழ்ச்சி 2/9/25 அன்று துவாரகா மழலைப் பள்ளியில் நடைபெற்றது.

இந் நிகழ்ச்சியை ஒருங்கிணைந்த செங்கல் பட்டு மாவட்டம் மொபைல் அசோசியேஷன் அப்துல் காதர் பாலாஜி நந்தீஸ்வரன் ஏற்பாடு செய்திருந்தனர். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழ்நாடு அனைத்து ரீடைலர் மொபைல் அசோசியேஷன் மாநில தலைவர் விஸ்வநாதன் அரிமா சங்கம் விஜயகுமார் கலந்துகொண்டார்கள்.





மேலும் ஒருங்கிணைந்த மாவட்ட தலைமை பொறுப்பாளர்கள் வெங்க டேஷ் பாலாஜி, பாலமுருகன், அருள், ராமசந்திரன், அப்துல் கரீம், பாக்யநாதன்,தங்கதுரை, திலீப், உசேன்,உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கண் கண்ணாடி பயனாளிகள் ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்ட சங்கத்தினருக்கு நன்றிகளை தெரிவித்து கொண்டனர்.

# ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில் 1962 முதல் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 5 ஆம் தேதி இந்தியாவில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது

சிவகங்கை, செப்.04-

டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்த நாளான செப்டம்பர் 5ஆம் நாளை அவரது நண்பர்கள் மற்றும் மாணவர்கள் சிலர் கொண்டாட அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டனர். அப்போது, “எனது பிறந்த நாளை தனித்தனியாக கொண்டாடுவதற்கு பதிலாக, அதே நாளை இந்தியாவில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் மரியாதை செலுத்தும் விதமாக “ஆசிரியர் தினமாக” கடைப்பிடித்தால் அது எனது பாக்கியமாகவும், பெருமை மற்றும் மரியாதையாக இருக்கும்“ என்று கேட்டுக்கொண்டார்.

ஆன்மீகக் கல்வியை படிப்பதன் மூலம் நல்ல சமுதாயமும் நாகரிகமான மனிதர்களும் உருவாக முடியும் என்று தீர்க்கமாக நம்பினார். தத்துவக் கல்வி ஒரு மனிதனை உயர்ந்த இடத்திற்கு அழைத்து செல்கிறது என்பதை மாணவர்களிடம் எடுத்துரைத்தார் . சுதந்திர இந்தியாவில் எந்த மாதிரி கல்வி தேவை என்பதை கருத்தில் கொண்டு அதற்கேற்ப பல்வேறு கருத்துகளையும் எடுத்துரைத்தார். கல்வியில் சிறந்த வழிமுறைகளையும் புகுத்தினார். பல சிக்கலான கருத்துக்களை கூட மாணவரிடம் மிக எளிமையாக கூறி புரிய வைத்தார். பாடம் நடத்தும் போது இவரின் நகைச்சுவை உணர்வும், அறிவாற்றல் பண்பும் மாணவர்களை வெகுவாக வசீகரித்தது. எத்தனை பெரிய பதவிகளை வகித்தாலும் எப்போதும் தான் ஒரு பேராசியர் என்ற எண்ணம் கொண்டுவராக இருந்தார். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பேராசிரியராகவும், துணைவேந்தராவும் ஆற்றிய பேறு பெற்றவர் ராதாகிருஷ்ணன். பேராசிரியராக இவர் கல்விப் பணியை செய்த போது மாணவர்கள் இவர் வகுப்பை மிகவும் விரும்பினர். தான் பணியாற்றிய இடத்தில் இருந்து விடை பெற்று சென்றபோது ஒளி



அனுப்புவதற்காக ரயில்வே நிலையம் முழுவதும் திரண்டிருந்த மாணவர்கள் இவரை பிரிய மனம் இல்லாமல் கண்ணீர் மழை பொழிந்தனர். 17 பட்டங்களை பெற்ற முதல் இந்தியரான டாக்டராகிருஷ்ணன் உலகில் சிறந்த பல விருது களைப் பெற்றுள்ளார். இந்திய அரசு 1954 ஆம் ஆண்டு நாட்டின் உயரிய விருதான பாரத ரத்னா விருதை வழங்கி கௌரவித்தது. டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 5 ஆம் நாளை மாணவர் சமுதாயம் ஆசிரியர் தினமாக ஒவ்வொரு ஆண்டும் இந்தியாவில் ஒரு திருவிழாவாக கொண்டாடி வருகிறது. ஒரு ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக திகழ்ந்தார். தான் மட்டும் அவ்வாறு இருந்தால் போதாது என்று நினைத்தவர் ஒவ்வொரு ஆசிரியரும் மாணவர்களின் கல்வி அறிவினை போற்ற எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு பல அரிய கருத்துக்களை எடுத்துரைத்தார். இவரது பெயரிலேயே “ சர்வ “ என்ற வார்த்தை இருந்ததால் என்னவோ உலகம் முழுவதும் போற்றக்கூடிய தலைவராகவும், “பள்ளி” என்ற வார்த்தை இருந்ததால் மாணவர்கள் அனைவரும் போற்றக்கூடிய ஒரு உன்னது ஆசிரியராக இன்றும் போற்றக்கூடிய ஒரு மாமனிதராக டாக்டர் ராதாகிருஷ்ணன் இருந்து வருகிறார். ஒரு மாணவனை அவன் யார் என்று உணர வைக்கக்கூடிய பாங்கினையும், சமுதாயத்தை நோக்கிய அவனது பார்வையையும் கொடுக்கக்கூடிய ஒரு மாபெரும் சக்தியே ஆசிரியர் சமுதாயமாகும். ஒரு நாடு தொழில்துறையிலும், பொருளாதாரத்திலும் முன்னேறினாலும் கல்வியின் முன்னேறினால் மட்டுமே அது சிறந்த நாடாக போற்றப்படும். தன் தாய் திருநாட்டை கல்வியில் சிறந்த நாடாக முயற்சி செய்து வரும் ஆசிரியர் சமுதாயத்தை போற்றும் விதமாக டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்த நாளான இந்நாளை ஆசிரியர் தினமாக கொண்டாடுவது ஏற்புடையதுதானே !

வருங்கால இந்திய தூண்களை உருவாக்கும் ஆசிரியர் சமுதாயத்தை போற்றுவோம் !

ம.பிரபு,
பட்டதாரி ஆசிரியர்,
கல்லல் முருகப்பா மேல்நிலைப்பள்ளி,
கல்லல்,
சிவகங்கை மாவட்டம்
அலைபேசி: 9944089151



# “கழுதைகள் எங்கே என்று யாராவது கவலைப்படுகிறார்களா?” தெருநாய்கள் குறித்த கேள்விக்கு கமல்ஹாசன் பதில்

சென்னை, செப்.04-

கழுதைகள் எங்கே என்று யாராவது கவலைப்படுகிறார்களா? நமக்காக அது எவ்வளவு பொதி சுமந்திருக்கிறது? என்று நடிகரும் மாநிலங்களவை உறுப்பினருமான கமல்ஹாசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த கமல்ஹாசனிடம் தெருநாய்கள் பிரச்சினை குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், “இதற்கான தீர்வு மிகவும் சிம்பிள். உலக சரித்திரம் தெரிந்தவர்கள், சமூக சுகாதாரம் என்னவென்று தெரிந்தவர்கள் கழுதைகள் எங்கே என்று கவலைப்படுகிறார்களா? நமக்காக அது எவ்வளவு பொதி சுமந்திருக்கிறது? ஆனால் இப்போது கழுதைகளையே காணவில்லை. அதை யாராவது காப்பாற்ற வேண்டும் என்று பேசினார்களா? எல்லா உயிர்களையும் காப்பாற்ற வேண்டும். எவ்வளவு முடியுமோ காப்பாற்ற வேண்டும்” என்று கமல்ஹாசன் தெரிவித்தார். கடந்த சில நாட்களாக இந்தியாவில் தெருநாய்க்கடி பிரச்சினை பெரியளவில் தலைதூக்கியுள்ளது. தொடர்ந்து சமூக வலைதளங்களில் நாய்க்கடி தொடர்பான வீடியோக்கள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி வரும் நிலையில், அண்மையில் தனியார் தொலைகாட்சி ஒன்றில் தெருநாய்கள் பிரச்சினை தொடர்பாக நடத்தப்பட்ட விவாத நிகழ்ச்சி சமூக வலைதளங்களில் வைரலானது. இந்த நிலையில், கமல்ஹாசன் இவ்விவகாரத்தில் கருத்து தெரிவித்துள்ளார்.




# வேலூரில், தேசிய கண்தான தினம் முன்னிட்டு, கண் தானம் குறித்து, ஊரிசு கல்லூரி மாணவர்கள் விழிப்புணர்வு ஊர்வலம்

வேலூர், செப்.04-

வேலூர் மாவட்டம், வேலூர், அண்ணா சாலை, மிகவும் பழமை வாய்ந்த, புகழ்பெற்ற ஊரிசு கல்லூரி எதிரில், டாக்டர். அகர்வால் கண் மருத்துவமனை மற்றும் ஊரீசு கல்லூரி இணைந்து தேசிய கண் தான தினத்தை முன்னிட்டு கண் தான விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் கண் தானத்தின் அவசியம் குறித்த கூட்டமும் பேராசிரியர் திருமாறன் தலைமையில் நடைபெற்றது. இதில் எம்பெருமாள் கோபிநாத், மண்டல மருத்துவத் தலைவர் டாக்டர். ஐசக் அபிரகாம்ராய் மற்றும் டாக்டர். அகர்வால் மருத்துவமனை பி.ஆர்.ஓ. தியாகராஜன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இதில் சிறப்பு அழைப்பாளராக காவல்துறை இணை கண்காணிப்பாளர் தனுஷ் குமார் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில் கண் தானம் சிறந்த மக்கள் தங்களின் மறைவுக்கு பின்னர் அனைத்து உடல் உறுப்புகளையும் தானமாக செய்ய வேண்டுமென பேசினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி மாணவ, மாணவிகள் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியபடி விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது. இதனை இணை காவல் கண்காணிப்பாளர் தனுஷ்குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த கண் தான விழிப்புணர்வு ஊர்வலமானது நகரின் முக்கிய வீதிகளான அண்ணாசாலை, ஆரணி சாலையின் வழியாக மீண்டும் ஊரீசு கல்லூரியை அடைந்தது. இதில் எல்லா வயதினரும் கண்தானம் அளிக்கலாம் இதன் மூலம் பார்வையற்றோர் எண்ணிக்கை குறையும் இறந்தவர்களும் கண் தானம் செய்யலாம் ஆகியவைகள் குறித்து மாணவர்கள் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.







# மாணவர்களுக்கு இயற்கை விவசாய விழிப்புணர்வு கல்வி சுற்றுலா

இராமநாதபுரம், செப்.04-

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் வட்டாரம் வேளாண்மைத்துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் ராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சேர்ந்த 100 கல்லூரி மாணவர்களை, இயற்கை வேளாண்மை குறித்த கல்வி சுற்றுலா பயணமாக எட்டிவயல் கிராமத்தில் உள்ள தரணி இயற்கை வேளாண் பண்ணை மற்றும் தெற்குத்தரவை அருகே தோரையன்வலசை அமைந்துள்ள பஞ்சவர்ணம் இயற்கை தேனி பண்ணைக்கு மாணவர்களை அழைத்துச் செல்லப்பட்டது. நிகழ்ச்சியினை ராஜேந்திரன் வேளாண்மை துணை இயக்குனர் உழவர் பயிற்சி நிலையம் பரமக்குடி மற்றும் செல்வம் வேளாண்மை உதவி இயக்குனர் திருப்புல்லாணி ஆகியோர் கலந்து கொண்டு தலைமை வகித்து தொடங்கி வைத்தனர் . வேளாண்மை துணை இயக்குனர் அவர்கள் மாணவர்களுக்கு உயிர்ம வேளாண்மையை பற்றி அறிந்து கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இயற்கை விவசாயி தரணி முருகேசன் அவர்கள் மாணவர்களிடம் இயற்கை முறை சாகுபடி மற்றும் அவற்றின் முக்கியத்துவம் குறித்தும், நஞ்சில்லா தானியங்களை உற்பத்தி செய்ய இயற்கை முறையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு, மூலிகை பூச்சி விரட்டி தயாரித்தல், கன ஜீவாமிர்தம் தயாரித்தல் போன்ற உயிர்ம வேளாண் இடுப்பொருட்கள் தயாரிக்கும் முறைகள் செயல்முறை விளக்கம் செய்து காட்டப்பட்டது. மேலும் தரணி முருகேசன் இயற்கை விவசாயி அவர்களது பண்ணையில் தயார் செய்யப்பட்ட 70 மேற்பட்ட மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் மாணவர்களுக்கு இயற்கை வேளாண்மையின் மீது ஆர்வத்தை தூண்டும் வகையில் காட்சிப்படுத்தப் பட்டிருந்தது. பின்னர் பஞ்சவர்ணம் தேனி பண்ணையில் உரிமையாளர் நந்தகுமார் தேனீ வளர்க்கும் முறைகள் பற்றி விளக்கி கூறினார்,தேன் அறுவடை செய்யும் முறைகளை மாணவர்கள் நேரடியாக பார்வையிட்டு தெரிந்து கொண்டனர். நிகழ்ச்சியில் மண்டபம் மற்றும் திருப்புல்லாணி வட்டாரங்களைச் சேர்ந்த வேளாண்மை அலுவலர்கள் மோனிஷா , ஹேமலதா மற்றும் ராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி துணை முதல்வர் சுப்ரமணியன் மற்றும் உதவி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் பானுமதி உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பவித்ரன் மற்றும் சோனியா ஆகியோர் செய்திருந்தனர்.

# தேவகோட்டைஆனந்தா கல்லூரியில் கணினி பயன்பாட்டுவியல் துறை மன்றக் கூட்டம்







சிவகங்கை, செப்.04-

சிவகங்கை மாவட்டம்தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் கணினி பயன்பாட்டுவியல் துறை சார்பாக மன்றக் கூட்டம் கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன், முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர்கள் தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக இன்ஃபண்ட் ஜீசஸ் மாதிரிப் பள்ளியின் முதுகலை கணினி அறிவியல் துறையின் ஆசிரியர்

திரு.ரா. மேனகா கலந்து கொண்டு பேசுகையில், இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (IoT) என்பது வெறும் கணினிகள் அல்லது கைபேசிகள் மட்டுமல்ல, மனிதர்களின் முயற்சி இல்லாமல் இணையத்துடன் இணைப்பு கொண்ட சாதனங்கள், இயந்திரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்த உதவும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை மாணாக்கர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். மேலும், ஸ்மார்ட் வீடு, விளக்கு, பூட்டு, குளிர்சாதனம் போன்ற சாதனங்களை தொலைவிலிருந்து கட்டுப்படுத்தும் செயற்கை நுண்ணறிவு முறைகளை எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் கணினி பயன்பாட்டு வியல் துறை மாணாக்கர்கள், துறைப் பேராசிரியர்கள், துணை முதல்வர்கள் அருட்தந்தை முனைவர் டென்சிங் ராஜன் மற்றும் முனைவர் விக்டர் பெனவெண்ட் ராஜ் ஆகியோர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.



# மாமன்னர் மருதுபாண்டியர் பேரவை சார்பில் கீழக்குளத்தில் குதிரை மற்றும் மாட்டுவண்டி பந்தயங்கள் போட்டி நடைபெற்றது



சிவகங்கை, செப்.04-

சிவகங்கை மாவட்டம் கீழக்குளம், ஓட்டக்குளம் கிராமம் அருள்மிகு அழகு நாச்சியம்மன் கோவில் முளைப்பாரி உற்சத்தை முன்னிட்டு மாமன்னர் மருதுபாண்டியர் பேரவை சார்பாக மாபெரும் குதிரை வண்டி மற்றும் மாட்டுவண்டிகள் போட்டி கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

குதிரைவண்டிகள், பெரிய மாடு, சின்னமாடு என இரண்டு பிரிவுகளாக நடைபெற்றது. சிவகங்கை, மதுரை என அண்டை மாவட்ட மாட்டுவண்டிகள் கலந்து கொண்டன..

சிவகங்கை மதுரை தேசிய நெடுஞ்சாலையில் 7 மற்றும் 8மைல்கல் தூரம் வரையில் மாட்டு வண்டிகள் ஓடிச்சென்றது.

இதில் முதலாவதாக மானாமதுரை அருகே உள்ள அதிகரை வேங்கை சேர்வை நினைவு மாட்டு வண்டி, இரண்டாவதாக ஆண்டி யப்பன் சேர்வை மற்றும் மூன்றாவதாக கீழக்குளம் அங்குச்சாமி சேர்வை நினைவாக மாட்டுவண்டிகளும் பரிசுக் வென்றது. முன்னதாக செவ்வாய்க்கிழமை மாலை குதிரைவண்டிப் பந்தயம் அதனைத் தொடர்ந்து இரவு பத்து மணியளவில், வள்ளிதிருமணம் எனும் நாடகம் நடைபெற்றது.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கீழக்குளம் மற்றும் ஓட்டக்குளம் கிராம பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.






# குண்ணவாக்கம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம்: சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் பங்கேற்பு

செங்கல்பட்டு, செப்.04-

உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் தமிழக முழுவதும் நடைபெற்று கொண்டு வருகிறது. இதில் ஏராளமான பொதுமக்கள் பயனடைந்து வருகின்றனர். இந்நிலையில் செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூர் ஒன்றியம் குண்ணவாக்கம் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் முகாம் நிகழ்ச்சி ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் ஊராட்சி மன்ற தலைவரும் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளருமான சத்யா தலைமை தாங்கினார். தெற்கு ஒன்றிய செயலாளர் ஆப்பூர் சந்தானம், மத்திய ஒன்றிய செயலாளர் கே.பி. ராஜன், காட்டாங்குளத்தூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் உதயா கருணாகரன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாஸ்கரன், மீனாட்சி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி செயலர் சங்கர் அனைவரையும் வரவேற்றனர். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்து பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்கள். முகாமில் 15 துறைகள் மூலம் சேவை திட்டங்கள் செய்யப்பட்டது. இதில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு மனுவினை அளித்தனர். நிகழ்ச்சியில் வார்டு கவுன்சிலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

## தாராபுரத்தில் ரூ.2.03 கோடி மதிப்பீட்டில் புதிய தினசரி சந்தை கடைகளை

# அமைச்சர்கள் சாமிநாதன் கயல்விழி நாடாளுமன்ற உறுப்பினர் இ கே பிரகாஷ் ஆகியோர் ரிப்பன் வெட்டி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்





திருப்பூர், செப்.04-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சிக் குட்பட்ட பகுதியில் ரூ.2.03 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய தினசரி சந்தை கட்டடத்தை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் முன்னிலையில் இன்று மாலை திறந்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் பேசுகையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கூறியதாவது: "முதலமைச்சர் ஸ்டாலின் அறிவித்த அனைத்து திட்டங்களும் விரைவாக மக்களிடம் சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம், மகளிர் சுய உதவிக் குழு கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, 1.5 லட்சம் விவசாயிகளுக்கு மின்இணைப்பு, பள்ளி சிறார்களுக்கு 'கண்ணொளி காப்போம்' திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கான முதலமைச்சரின் காலை உணவு திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன" என்றார்.

தொடர்ந்து, தாராபுரம் நகராட்சி சி.எஸ்.ஐ தேவாலயம் எதிரில், கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2.03 கோடி மதிப்பீட்டில் சர்வே வார்டு 6, பிளாக் 3, சார்வே எண் 90 பகுதியில் 55 தினசரி காய்கறி கடைகளும் ஒரு டிபார்ட்மெண்ட் ஸ்டோர் ரூம் மேலும் ஒரு உணவகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ள இதனுடன் சேர்த்து புதிய சந்தை கட்டடமும் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தாராபுரம் நகர்மன்றத் தலைவர் பாப்புக்கண்ணன், துணைத் தலைவர் எம்.ரவிச்சந்தரன், நகராட்சி ஆணையர் ச.முஸ்தபா, நகராட்சி பொறியாளர் சுகுசுகந்தி, உதவி பொறியாளர் கதியாகராஜன், உள்ளாட்சி அமைப்புகள் பிரதிநிதிகள் மற்றும் துறைசார் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானது வருகின்ற 4.9.2025 அன்று கானாடுகாத்தான் பேரூராட்சி, கல்லல், சிவகங்கை, தேவகோட்டை, மானாமதுரை ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவைகளில் குறிப்பிட்ட பகுதிகளுக்கான முகாம்கள், குறிப்பிட்ட பகுதிகளில் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தகவல்

சிவகங்கை, செப்.04-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாமானமது, சிவகங்கை மாவட்டத்தில் 15.7.2025 அன்று முதல் செப்டம்பர் 2025 வரை ஒவ்வொரு வாரமும், நான்கு நாட்களில் நாள் ஒன்றுக்கு 6 முகாம் வீதம் மொத்தம் 215 முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, 15.7.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை தொடர்ந்து, வருகின்ற செப்டம்பர் 4 ஆம் தேதி கானாடுகாத்தான் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்: 1 முதல் 6 வரை உள்ள பகுதிகளுக்கென நேமத்தான்பட்டி, மாணிக்கவாசகர் தெருவில் அமைந்துள்ள பனையம்மை படைப்பு திருமண மண்டபத்திலும், கல்லல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அ.சிறுவயல், நடராஜபுரம், வேப்பங்குளம், பனங்காடி, பி.நெற்புகபட்டி ஆகிய பகுதிகளுக்கென அ.சிறுவயல் ஊராட்சியில் அமைந்துள்ள தாகூர் நடுநிலைப்பள்ளியிலும், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மலம்பட்டி, அழகிச்சிப்பட்டி, ஒக்கப்பட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென மலம்பட்டி ஊராட்சியில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப்பள்ளியிலும், தேவகோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சருகனி, வெள்ளிக்கட்டி, உருவாட்டி ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென சருகனி ஊராட்சியில் அமைந்துள்ள புனித பால் துவக்கப்பள்ளியிலும்,

மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேலநெட்டூர், டி.புதுக் கோட்டை, தெற்கு சந்தனூர் ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கென மேலநெட்டூர் ஊராட்சியில் அமைந்துள்ள சமுதாயக்கூடத்திலும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமானது நடைபெறவுள்ளது.

மேலும், "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களின் வாயிலாக, நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் அந்தந்த துறைகளால் சேவைகள் வழங்கப்படும். அதில், நகர்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 13 துறைகளின் மூலம் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் நடத்தப்படும் முகாம்களில் 15 துறைகளின் மூலம் 46 சேவைகளும் வழங்கப்படவுள்ளது.

இதில் சொத்துவரி, குடிநீர் வசதி உரிமங்கள் மற்றும் அனுமதி, கழிவு நீர் இணைப்பு, அடிப்படை வசதிகள், பராமரிப்பு, பிறப்பு இறப்பு சான்றிதழ்கள், காலி நிலவரி, தெரு வியாபாரி அடையாள அட்டை, சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் ஆகியவைகள் நகர்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் வாயிலாக வழங்கப்படவுள்ளது.

மேலும், பட்டாவில் பெயர் மாற்றம் மற்றும் பட்டா பெயர் திருத்தம், பட்டா சிட்டா நகல், பிறப்பு, இறப்பு சான்று வாரிசு சான்றிதழ், சாதிச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் உள்ளிட்ட மனுக்களுக்கு இம்முகாமில் உடனடி தீர்வு காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் மனு அளித்திட விடுபட்ட தகுதியுள்ள பயனாளிகளும் இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொண்டு மனு அளிக்கலாம்.

எனவே, இம்முகாமினை முறையாக பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் வசிக்கும் அந்தந்த பகுதியில் முகாம் நடை பெறும் நாளன்று, உரிய ஆவணங் களுடன் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி, இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161